IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

SC.NO.160/2022

Deposition of Witness for P.W.19

| | | |
|---|---|---|
| NAME | - | **திருமதி.கலைச் செல்வி** |
| FATHER NAME | - | |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | **சட்டம் சார்ந்த மருத்துவ துறை பேராசிரியர், (தலைமைப் பொறுப்பு) வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை.** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.01.2026.

எதிரிகள் ஆஜர். 5,6 எதிரிகள் ஆஜர் இல்லை மனு ஏற்பு. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் வேலூர் அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியல் சட்டம் சார்ந்த மருத்துவ துறை பேராசிரியராக தலைமைப் பொறுப்பில் பணியாற்றுகிறேன். கடந்த 11.06.2020 அதே பணியிலிருந்தபோது பனமடங்கி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின் படி குற்ற எண்.252/2020 சம்மந்தமான ஆண் பிரேதம் திரு.கிருஷ்ணன், வயது 65, என்பவரது பிரேதத்தினை தலைமைக் காவலர் 1972 திரு.தஷ்ணாமூர்த்தி அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு அதே நாள் முற்பகல் 11.45 மணியளவில் பிரேதக் கூராய்வினை செய்தேன்.

<u>புற ஆய்வு</u> - ஆண் பிரேதம் மிதமான கட்டமைப்புடனும் ஊட்டச் சத்துடனும் காணப்பட்டன. மரண விரைப்பு உடல் முழுவதும் பரவி இருந்தது. உதடுகள்

மற்றும் நக கனுக்கள் வெளிரி காணப்பட்டன. இடது கண் வீங்கியும் கருத்தும் காணப்பட்டது. உடலின் மேல் காணப்பட்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட வெளிபுற காயங்கள் பின் வருமாறு. 1) செம்பழுப்பு நிற சிராய்ப்புகள் வெவ்வெறு அளவிலும் வடிவிலும் இடது முழுங்கை மற்றும் கையில் ஆங்காங்கே சுமார் 16.4x7.9 செ.மீ. பரப்பில் காணப்பட்டன. 2) செம்பழுப்பு நிற கன்னிய காயங்கள் அ)10.9x6.5 செ.மீ இடது தோள்பட்டையின் முன் புறத்திலும் ஆ)6.2x4.5 செ.மீ. இடது முழுங்கையிலும் இ)5.6x3.9 செ.மீ. வலது கையில் பின் புறத்திலும் ஈ) 7.3x5.2 செ.மீ. வலது காலில் உ)6,9x4.6 செ.மீ இடது கனுக்காலில் வலது புறத்திலும் காணப்பட்டன. மேலும் காயங்களை கிழித்து பார்கையில் இரத்தம் வெளியேறி இருந்தது. 3) கிழிந்த காயங்கள் அ)குறுக்காக அமைந்த எலும்பு வரை ஆழத்திலுள்ள 6.5x1.5 செ.மீ அளவில் இடது முன் நெற்றியிலும் ஆ) சாய்வாக அமைந்த எலும்பு வரை ஆழத்திலுள்ள 4.6x2.1 செ.மீ பின்புற தலையின் வலது புறத்திலும் காணப்பட்டன. 4) வீக்கம் மற்றம் சிதைவு வலது முழங்கையில் நடு பகுதியில் காணப்பட்டது. மேலும் கூறாய்வு செய்கையில் காயத்தின் சீராக அமைந்த இரண்டு எலும்புகளும் முழுவதுமாக முறிந்து காணப்பட்டன. முறிவை சுற்றிலும் இரத்தக் கசிவு காணப்பட்டது. 5)வீக்கம் மற்றும் சிதைவு இடது கனுக்காலுக்கு சற்று மேலாக காணப்பட்டது. மேலும் கூறாய்வு செய்கையில் கனுக்கால் எலும்புகள் முழுவதுமாக முறிந்து காணப்பட்டன. முறிவைச் சுற்றிலும் இரத்தக் கசிவு காணப்பட்டது.

<u>அக ஆய்வு-</u>

தலைப் பகுதியை கூறாய்வு செய்ததில் தலைத் தோலின் முன் மற்றும் வலது பகுதியில் இரத்தக் கட்டி மற்றும் கன்றிய காயம் காணப்பட்டது. கபாலத்தின் மேல் பகுதியில் சுமார் 7.2 செ.மீ. அளவிலான நேரியல் முறிவு வலது பக்கத்தில் காணப்பட்டது. கபாலத்தின் அடிப்பகுதியில் சுமார் 4.7 செ.மீ. மற்றும் 6.9 செ.மீ. அளவிலான நேரியல்முறிவுகள் முன் மற்றும் நடு பகுதியில் காணப்பட்டன.

மூளையை சுற்றிலும் சுமார் 2.1 செ.மீ. தடிமனுள்ள இரத்தக் கட்டிகள் முழுவதுமாக படர்ந்து காணப்பட்டது. மூளையின் வலது புறத்தில் கன்றிய காயம் காணப்பட்டது. மூளையை பிளந்து பார்கையில் வெளிரி காணப்பட்டது. கழுத்து பகுதியை கூறாய்வு செய்ததில் கழுத்து தசைகள் மற்றும் மூச்சுக் குழாய் மற்றும் நாவடி எலும்புகள் இயல்பாக இருந்தன. மார்பு பகுதியை கூறாய்வு செய்ததில் நெஞ்சாங்கூடு மற்றம் விலா எலும்புகள் இயல்பாகவும், நுரையீரல்கள் வெளிரியும் காணப்பட்டன. இருதயம் இயல்பான அளவிலும் இருதய தமனிகளில் சிறிதளவு கொழுப்பு படலமும் காணப்பட்டது. வயிற்றுப் பகுதியை கூறாய்வு செய்ததில் இரைப்பையில் சுமார் 100 மில்லி அளவிளான செம்பழுப்பு நிற திரவம் காணப்பட்டது. கல்லீரல் சற்று வீங்கியும் அதனை பிளந்து பார்கையில் கொழுப்பு படர்ந்தும் காணப்பட்டது. மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் இயல்பாகவும் பிளந்து பார்கையில் வெளிரியும் காணப்பட்டன. பிறப்புறுப்புகள்இயல்பாக இருந்தது. உள் உறுப்புகள் இரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு அதில் மதுவோ. நச்சுப் பொருட்களோ இல்லை என்று அறிக்கை பெறப்பட்டது. மேலும் இரத்த மாதிரி இரத்த வகை பிரிவு ஆய்வுக்காக அனுப்பப்பட்டது. எனது இறுதி கருத்தில் மேற்கண்ட நபர் மேற்கண்ட காயங்களின் விளைவினால் ஏற்பட்ட இரத்தப் போக்கின் காரணமாக இறந்திருக்கக் கூடும் என்று இறுதி கருத்துரை வழங்கினேன். பிரேத பரிசோதனை மேற்கொள்ள வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.33 ஆகும். சடலக்கூறாய்வுச் சான்று அ.த.சா.ஆ.34 மற்றும் இறுதி கருத்துரை அ.த.சா.ஆ.35 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் இவ்வழக்கின் சான்று பொருட்களாக கடப்பாறை மரக்கட்டையால் தாக்கினால் இறப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. கடப்பாறையின் முனையில் தாக்காமல் மற்ற பகுதியில் தாக்கினால் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

குறுக்கு விசாரணை-

இறந்தவருக்கு ஏற்பட்ட காயம் 1ல் கூறிய சிராய்ப்பு காயம் அவர் கீழே விழும்போதோ அல்லது கீழே விழுந்தவரை இழுக்கும்போதோ ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் கீழே விழும்போது விழும் இடத்தில் சீர் அற்ற கற்கள் இருக்கும்போது ஏற்பட வாய்ப்பு உள்ளது. அவரை இழுப்பதால் ஏற்பட வாய்ப்பு இல்லை. காயம் 2, 4 மற்றும் 5 தனித்தனியான காயங்கள் என்றால் சரி. காயம் 3, 4, 5 மூன்று காயங்களுமே இறப்பை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது. மேற் சொன்ன மூன்று காயங்களுமே தனித்தினியாகவும் இறப்பை ஏற்படுத்தக் கூடும். காயம் 3ல் குறிப்பிடப்பட்ட காயங்கள் இரண்டு தனித்தனியான வெளிப்புற காயங்கள். மற்ற விவரங்கள் அனைத்தும் அந்த காயங்களின் உள் பகுதியை குறிப்பிடுபவை. இறந்தவர் எந்த நேரத்தில இறந்திருக்கக்கூடும் என அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரி. பிண விரப்புத் தன்மை உடலின் கீழ் பகுதியில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 20.01.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2026.01.20 19:49:10 +0600

Additional District Judge(FTC),
Vellore